**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

**“அனைவரும் கற்போம்”** **“அனைவரும் உயர்வோம்”**

அனுப்புநர்

மாநில திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
சென்னை – 600 006.

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்கள் /
மாவட்ட திட்ட அலுவலர்கள்,
அனைத்து மாவட்டங்கள்

**ந.க.எண்: 1845/அ11/பயிற்சி/ஒபக/2021 நாள்: 17.09.2021**

அய்யா / அம்மையீர்,

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – 2021–22 ஆம் கல்வியாண்டில் அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு இணைய வழியாக அடிப்படை கணினி பயன்படுத்துதல், EMIS, மற்றும் Hi–Tech Lab ஆகியவற்றில் திறன் வளர் பயிற்சிக்கான ஐந்தாம் கட்ட கால அட்டவணை மாவட்டங்களுக்கு தெரிவித்தல்– சார்ந்து.

**பார்வை:**
1. இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண்: 1845/அ11/பயிற்சி/ஒபக/2021 நாள்: 6.08.2021
2. இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண்: 1845/அ11/பயிற்சி/ஒபக/2021 நாள்: 18.08.2021
3. இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண்: 1845/அ11/பயிற்சி/ஒபக/2021 நாள்: 31.08.2021
4. இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண்: 1845/அ11/பயிற்சி/ஒபக/2021 நாள்: 8.09.2021

*****

அரசு பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் இணைய வழியாக அடிப்படை கணினி பயன்படுத்துதல், EMIS, Hi–Tech Lab மற்றும் ICT ஆகியவற்றில் திறன் வளர் பயிற்சி ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் வழங்க திட்டமிடப்பட்டு இது வரை நான்கு கட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஐந்தாம் கட்ட பயிற்சியாக இதுவரை பயிற்சியில் பங்கேற்காத அனைத்து அரசு தொடக்கப்பள்ளி, நடுநிலை தலைமையாசிரியர்கள் / ஆசிரியர்கள், உயர்நிலை/மேல்நிலைப்பள்ளியில் உள்ள

தலைமையாசிரியர்கள், முதுகலை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 22.9.21 முதல் 24.9.21 வரை மற்றும் 27.9.21, 28.9.21 ஆகிய 5 நாள்கள் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதில் உயர்நிலை/மேல்நிலைப்பள்ளியில் இதுவரை பயிற்சியில் கலந்துக்கொள்ளாத தலைமையாசிரியர்கள், முதுகலை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களில் 50% ஆசிரியர்கள் இக்கட்ட பயிற்சியில் கலந்துக்கொள்ள வேண்டும். உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளில் வகுப்புகள் பாதிக்காத வண்ணம் பயிற்சி திட்டமிடப்பட வேண்டும்.

இப்பயிற்சியில் மாணவர்கள் சிலரிடம் ஏற்படும் கற்றலில் குறைபாடினை (Specific Learning Disability–Eg. Dyslexia) ஆசிரியர்கள் அறிந்துகொள்ளும் வழிமுறைகள் மற்றும் மன இறுக்கம் (autism) குறித்த விழிப்புணர்வு இணைக்கப்பட்டுள்ளது.

பயிற்சிக்கான கால அட்டவணை ( நாள் 1 முதல் நாள் 5 வரை)

| Time | Transaction( 1 to 4 days) | 5 th day |
|---|---|---|
| 09:00 am - 10:00 am | Attendance in **exams.tnschools.gov.in/login** | |
| 10:00 am - 10:30 am | Welcome & Briefing (through Central YouTube channel) | |
| 10:30 am - 1.00 pm | Video based self learning & hands on training (By District Resource person through YouTube channel) | Training through central YouTube channel |
| 1.00 pm - 02:00 pm | Lunch | |
| 02:00 pm - 02:45 pm | Doubt clearing session(through Central YouTube channel) | Training through central YouTube channel |
| 02:45 pm - 03:00 pm | Login for assessments | |
| 03:00 pm 03:30 pm | Assessments in **exams.tnschools.gov.in/login** | |
| 03:30 pm - 04:00 pm | Submission of assignments | |

பார்வையில் கண்ட இவ்வலுவலகக் கடிதங்களில் இப்பயிற்சிக்கான தெளிவான வழிகாட்டுதல்களாக கூறியவைகள் அனைத்தும் மாவட்டங்களில் இப்பயிற்சிக்கும் பின்பற்ற வேண்டும். பயிற்சியில் பங்கேற்கும் அனைத்து ஆசிரியர்களிடமும் **வலியுறுத்தப்பட** வேண்டிய முக்கிய குறிப்புகள் பின்வருமாறு

- இப்பயிற்சியினை ஆசிரியர்கள் உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தில் இருந்து மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.
- **exams.tnschools.gov.in/login** url மூலம் உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தில் உள்ள கணினியில் மட்டுமே காலை **9.00 மணி முதல் 10.00 மணிக்குள்** தங்கள் வருகையினை கண்டிப்பாக EMISல் பதிவு செய்தல் வேண்டும்.
- ஒவ்வொரு நாளும் கருத்தாளர்கள் மூலம் you tube வழியாக நேரடி பயிற்சி அளிக்கப்படுவதை நன்றாக உள்வாங்கிக்கொண்டு அதன்பின் அதற்கான சுயவிளக்க காணொளிகளையும் கவனத்துடன் பார்க்க வேண்டும்.
- ஆசிரியர்கள் தாங்கள் கற்றுக்கொண்டதை செய்முறை பயிற்சியாக தாங்களாகவே கணினியில் கட்டாயம் செய்து பார்க்க வேண்டும்.
- பயிற்சிக்கு வந்துள்ள அனைத்து ஆசிரியர்களும் பிற்பகல் 1.00 மணி முதல் 3.00 மணிக்குள் மதிப்பீட்டிற்கு **exams.tnschools.gov.in/login** url மூலம் உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தில் உள்ள கணினி வழியாக மட்டுமே பதிவு செய்யவேண்டும்.
- **பிற்பகல் 3.00 மணி முதல் 4.30 மணிக்குள்** அனைத்து ஆசிரியர்களும் தங்களது மதிப்பீட்டினை செய்து முடிக்க வேண்டும்.
- ஒவ்வொரு நாளும் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஒப்படைப்பினை (Assignment) நிறைவு செய்து சமர்பிக்க வேண்டும்.
- **ஒவ்வொரு நாளும் பயிற்சி நிறைவடைந்ததும் TN EMIS mobile App ல்** ஆசிரியர்கள் **தங்கள் பின்னூட்டத்தினை** பயிற்சி மையத்திலிருந்து

செல்லுவதற்கு முன் அந்நாளுக்குரிய **பின்னூட்டத்தினை ( feedback) கட்டாயமாக (Mandatory) பதிவு செய்ய வேண்டும்.**

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியில் உள்ள உயர் தொழில் நுட்ப ஆய்வகத்திலுள்ள கணினிகள், நிழல் பட வீழ்த்தி (LCD Projector) சரியாக இயங்குவதில் கண்டறியப்படும் பிரச்சனைகளை உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நபர்களிடம் தெரிவிக்க (Ticket Raise) வலியுறுத்த வேண்டும்.

தற்பொழுது கருத்தாளர்களாக செயல்பட்டு வரும் கருத்தாளர்களே இப்பயிற்சிக்கும் கருத்தாளர்களாக செயல்பட வேண்டும். மாவட்டங்களில் பயிற்சியில் பங்கேற்க உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கேற்ப பயிற்சிக்கான மையங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். பயிற்சிக்கான மையம் மேல்நிலைப் பள்ளி எனில் அதிக பட்சமாக 20 கணினி இணைப்புகளும் (Thin Clients) உயர்நிலைப்பள்ளி எனில் அதிக பட்சமாக 10 கணினி இணைப்புகளும் பயன்படுத்தப்பட வேண்டும்.

எனவே பயிற்சி வழங்கப்பட வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை அடிப்படையில் அப்பயிற்சி மையங்கள் மற்றும் கருத்தாளர்களை EMISல் 18.9.21 அன்றுக்குள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தின் பொறுப்பாசிரியர்களாக உள்ளவர்களுக்கு அப்பள்ளியில் 6,7,8 வகுப்புகளை கையாளும் ஆசிரியர்கள் உதவி புரிய வேண்டும். எனவே பயிற்சியின் அனைத்து நாள்களிலும் உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தில் ஒரு பொறுப்பாசிரியர் இருக்க அறிவுறுத்தப்பட வேண்டும்.

**இப்பயிற்சிக்கு பங்கேற்கவுள்ள தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் தாங்களாகவே TN EMIS app ல் 21.09.21 அன்று சுய பதிவு செய்து கொள்ள வேண்டும். பயிற்சியில் கலந்துக்கொள்ள சுய பதிவு செய்து கொள்ளும் பொழுது தங்கள் பள்ளி பயிற்சி மையமாக இருப்பின் அம்மையத்தினை தெரிவு(Select) செய்து submit/save செய்ய வேண்டும். தங்கள் பள்ளி பயிற்சி மையமாக இல்லையெனில் அருகிலுள்ள பயிற்சி மையத்தினை தெரிவு(Select) செய்து submit/save செய்ய வேண்டும்.**

எனவே மேற்கூறியவைகள் அனைத்தையும் பின்பற்றி ஆசிரியர்களை பயிற்சியில் தவறாது பங்கேற்பவைப்பதற்கும் அவர்கள் பயிற்சியின் பின்னூட்டத்தினை கண்டிப்பாக அளிக்கவும் தக்க நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்/ மாவட்ட திட்ட அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் பயிற்சியில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் பெருந்தொற்று காலத்தில் அரசால் வெளியிடப்பட்டுள்ள நிலையான வழிக்காட்டு நெறிமுறைகளை தவறாமல் கடைபிடிக்க வலியுறுத்தப்படவேண்டும்.

**மாநில திட்ட இயக்குநருக்காக**

17/7/21

**நகல்:**

1. ஆணையர், பள்ளிக் கல்வி ஆணையரகம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது
2. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது
3. இயக்குநர், தொடக்க கல்வி இயக்கம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது